பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 09 வியாழக்கிழமை (26-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 338

# நீர்வேலிப் பகுதியில் நேற்று கடும் சண்டை

## முழுநாளும் பயங்கர ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 26

நீர்வேலிப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 5-30 மணியளவில் பெரும் எடுப்பில் முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் கடுமையாக மோதினர்.

டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் பயங்கர ஷெல் தாக்குதலை நடத்தியவாறு நீர்வேலிப் பகுதியை நோக்கி முன்னேறிய படையினருக்கு எதிராக போராளிகள் துணிகரமாக எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர்.

அப் பகுதியில் நேற்றுக் காலை முதல் மாலை வரை உக்கிரமான சண்டை இடம்பெற்றது. இச்சண்டையில் படையினர் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

கடும் சண்டை நடந்த அதேவேளை படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து

# பயணிகள் பஸ்ஸின் மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு

## ஐவர் பலி; 15 பேர் காயமுற்றனர்

மன்னாரில் நிலக்கண்ணி ஒன்று வெடித்ததைத் தொடர்ந்து பொலிஸார் பயணிகள் பஸ்ஸை நோக்கி சுட்டதில், ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் 15 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

தரவைக்குளத்தில் நிலக்கண்ணி வெடித்ததில் ஜீப்பில் சென்று கொண்டிருந்த மூன்று பொலிஸார் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த மற்றொரு தொகுதி பொலிஸார் மக்கள் பயணம் செய்து கொண்டிருந்த பஸ்ஸை நோக்கிச் சுட்டதாகவும் —

இராணுவத்தினர் நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு இது குறித்து அறிக்கை எதனையும் விடவில்லை. (ஒ-3)

# தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் உண்ணாவிரதம்!

## தலைநகர் கொழும்பிலும் மண் மூடை காவலரண்கள்!

கொழும்பு, ஒக். 26

வடக்கு - கிழக்குப் பகுதிகள் மட்டுமல்லாமல், தற்போது தலைநகர் கொழும்பிலும் படையினர் மண் மூடை காவலரண்களை அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களிலும், பெரிய கட்டடங்கள் முன்னாலும் மண் மூடைகள் அடுக்கப்பட்டு படையினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நவீன ஆயுதங்களுடன் முப்படையினரும், பொலிஸாரும் நகரில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். படையினரின் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

### இலங்கை இனப்பிரச்சினை:

## மத்தியஸ்தம் வகிப்பதற்கு 6 நாடுகள் விருப்பம்

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிக்க தற்போது 6 நாடுகள் தமது விருப்பத்தை ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரிவித்துள்ளன என "ராவய" பத்திரிகை தெரிவிக்கிறது.

கனடா, அவுஸ்ரேலியா, பிரிட்டன், நோர்வே, நெதர்லாந்து, சுவீடன் ஆகியனவே மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ள நாடுகளாகும்.

அமெரிக்கா தனது விருப்பத்தை நேரடியாகத் தெரிவிக்காத போதிலும், மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் கோரும் பட்சத்தில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று கூறியது தெரிந்ததே. [ஒ-10]

## ஆர்ப்பாட்டப் பேரணியும் நடக்கும்

சென்னை, ஒக்டோபர் 25

ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவத் தாக்குதல்களை நடத்தி அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்வதைக் கண்டித்து —

தமிழகத்தைச் சேர்ந்த முப்பது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று காலை முதல் மாலை வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு எந்த விதத்திலும் உதவக்கூடாது என்றும் —

மத்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் — கோரும் மகஜர் ஒன்று முப்பது அமைப்புகளாலும் கூட்டாக புதுடில்லிக்கு அனுப்பப்பட்டது.

இக்கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காவிடில், இந்திய அரசை எதிர்த்து விரைவில் சென்னையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படும் என்று அமைப்பாளர்களில் ஒருவரான திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் தெரிவித்தார்.

மறுமலர்ச்சி தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் முன்னேற்றக் கழகம், தலைநகர் தமிழ்ச் சங்கம், தமிழ் இயக்கம், உலகத் தமிழின இளைஞர் பேரவை, ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியன

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரைக் கைப்பற்றும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்

## இப்படிக் கூறுகிறார் பிரிகேடியர் சரத் முனசிங்க

கொழும்பு, ஒக். 26

யாழ்நகரைக் கைப்பற்றும் வரை "சூரிய பிரகாசம்" இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார் என "வெரித்தாஸ்" சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ் நகர் மீதான தாக்குதலை தொடுப்பதற்கு ஸ்ரீலங்கா இராணுவம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சியை பாதுகாப்புப் பிரதேசமாக உடன் பிரகடனம் செய்யுமாறு கோரிக்கை

## இடம்பெயரும் மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான குடாநாட்டு மக்கள் பாதுகாப்பாக தங்க வசதியாக தென்மராட்சிப் பகுதியை உடனடியாக பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்யவேண்டும்.

அகதிகளுக்கான ... தூதரகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு ... சர்வதேச அமைப்புக்களிடம் நேற்று இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

... இணைப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் இக்கூட்டத்தில் பிரசன்னமாகி இருந்தனர்.

குடாநாட்டில் இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. —

இந்த பாரிய இராணுவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனாட்சிப்பிள்ளை ஆறுமுகம்

காரைநகரைப் (மொந்திபுலம்) பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மீனாட்சிப்பிள்ளை ஆறுமுகம் (25-10-95) நேற்றுச் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், திரவியமலர், சரஸ்வதி, கந்தசாமி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், தி. வேலுப்பிள்ளை, ஆ. நடேசானந்தன், க. சுஜந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயகலா, அருட்செல்வன், ரஜனி, சஷிகலா, பிரதீபன், யுகதீபன், வக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பொ. அம்பலவாணர் [நகை மாளிகை யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [26-10-95] வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. வேலுப்பிள்ளை
[மருமகன்]

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

[39153]

## ஆறுமுகம் பொன்னுத்துரை

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் பொன்னுத்துரை 25-10-95 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தனலட்சுமி, பரணிமலர் [வைத்திய சாலை, கோப்பாய்], சரவணபவானந்தன் [ஆசிரியர், அச்சுவேலி மாகவித்தியாலயம்], நிற்குணாநந்தன் [கிளிக்கடை, நீர்வேலி], சண்முகலிங்கம் [போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம்] ஜெபலட்சுமி விஜியலட்சுமி (வைத்தியசாலை, அச்சுவேலி], ஜெயராணி [ஜேர்மனி] சற்குணநாதன் [விவசாயபீடம், கிளிநொச்சி] ஆறுமுகசாமி (ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சரவணபவன், மகாதேவன் விஜியசிறி, கௌரீஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும், கிருபானந்தபவானி சதீஸ்குமார், கார்த்திகா, நவீனன், பிரவீனா, பிருந்தினா, ரிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-10-95) வியாழக்கிழமை, இலக்கம் 81, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டில் உள்ள இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. நிற்குணாநந்தன் (கிளி)
[மகன்]

நாயன்மார்க்கட்டு

(39149)

## செல்லப்பா சிவரத்தினம்

[சங்கானை]

(இளைப்பாறிய சிவில் சேவை அதிகாரி)

தேவாலய வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா சிவரத்தினம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா – நாகம்மா தம்பதிகளின் மகனும், அன்னபூரணம் அவர்களின் கணவரும், லலிதா [விக்டோரியாக் கல்லூரி ஆசிரியை], காலஞ்சென்ற Dr. சுரோஜனா [P.H.D யாழ். மருத்துவ பீடம்] ஆகியோரின் அருமைத் தந்தையாரும், செ. மகேஸ்வரன், சோ. மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும், திருமதி மகாதேவா – செல்வரத்தினம், விஜயரட்ணம், திருமதி நாராயணலிங்கம் – அரியரத்ணம் ஆகியோரின் சகோதரரும், செல்வி சமந்தா, கவுதமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 18, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணத்தில் நேற்று [25 – 10 – 95] புதன்கிழமை மாலை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
செ. மகேஸ்வரன் (மனோ)
[மருமகன்]

[39152]

## தம்பையா சண்முகம்

[சித்தப்பா - Safety Travels]

புளியங்கூடலைச் சேர்ந்த தம்பையா சண்முகம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா – முத்தம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், தில்லைஅம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மாணிக்கம் நவரெத்தினம், இராசரத்தினம், திருமதி நாகேஸ்வரி இராசரத்தினம் ஆகியோரின் சகோதரரும், ஜெயலட்சுமி, ஜெயகௌரி [ஜேர்மனி], ஜெயராணி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாகரட்ணம், பாலசிங்கம் (ஜேர்மனி) அரசரட்ணம், ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சுந்தரலட்சுமி கோபாலப்பிள்ளையின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(26-10-95) மாலை 2.00 மணியளவில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் நடைபெறும்.

தகவல்:
மு. கோபாலப்பிள்ளை
(மைத்துனர்)

196, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(39147)

## 'ஹபரண' கப்பல் வரத் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக். 26

திருகோணமலையில் இருந்து மாவுடன் 'ஹபரண' கப்பல் இன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட மாட்டாது என்று நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

கப்பல் புறப்படாததற்கான காரணம் யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வரை அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, திருகோணமலை பிரிமா ஆலையில் மா கையிருப்பில் இல்லை என ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்று தெரிவித்தது. (ஓ-3)

## 3 மாதங்களுக்கு முன் நாய் கடித்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 26

மூன்று மாதங்களுக்கு முன் விசர்நாய்க் கடிக்கு இலக்கான வயோதிபப் பெண் ஒருவர் தகுந்த சிகிச்சை மேற்கொள்ளாது அசிரத்தையாக இருந்தமையால் விசர்நாய்க் கடியினால் ஏற்படும் நோயினால் பீடிக்கப்பட்டு நேற்று மரணமானார்.

விசர்நாய்க்கடி நோய்க்கான (ஏ.ஆர்.வி) தடுப்பூசி மருந்தை போடாததினாலேயே அந்த நோய்க்குள்ளாகி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த லோறன்ஸ் பாக்கியம் [வயது 60] என்பவரே மரணமானவராவார். (ஓ-15)

## செயன்முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஒக். 26

1995 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. (உ/த)ரப் பரீட்சையில் நடன, சங்கீத, மனைப்பொருளியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை வலயம் 1, கல்விப் பணிமனையில் இன்று வியாழன் பெற்றுக்கொள்ளும்படி பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் கேட்கப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்படையாத இடங்களில் உள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். (ஓ)

## இடம்பெயர்ந்த குடும்பநல சேவையாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து அங்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள குடும்பநல சேவையாளர்களை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு —

சாவகச்சேரி சுகாதார பணிமனையில் சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய பிரதி மாகாண சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-4)

## கடற்படை சிப்பாய் வேட்டுக்குப் பலி!

சுற்றிவளைப்பு கடற்படை முகாமில் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படைச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மற்றொரு கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

[illegible]

டி. கே. மாரசிங்க (வயது 22) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

## கொடும்பாவிகள் எரிப்பு

வடமராட்சிப் பகுதியில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினதும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையினதும் கொடும்பாவிகள் பறை மேளங்களுடன் ஊர்வலமாக இழுத்து வரப்பட்டு எரிக்கப்படுகின்றன.

இப்படியான சம்பவம் ஒன்று ஞாயிறன்று பொலிகண்டிப் பகுதியிலும் இடம்பெற்றது. [இ-4ரி]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி தம்பு

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தம்பு அவர்கள் நேற்று 25-10-95 காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தம்புவின் அன்பு மனைவியும், திருமதி சர்வலோகேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி, திருமதி நாகேஸ்வரி, திருமதி நகுலேஸ்வரி சத்தீஸ்வரன், சத்தியலோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவபாதம், துரைராசா, நடேசுவரன், கருணாகரன், சரோஜினி ஆகியோரின் அன்பு மாமியும், வைரமுத்து, மயில்வாகனம் தம்பிப்பிள்ளை ஆகியோரது சகோதரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் திருமதி பொன்னுப்பிள்ளை, திருமதி புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இணுவிலில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் 25-10-95 6-00மணியளவில் தகனம்செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
வே. தம்பு
(கணவன்)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

[39144]

## திருமதி அன்னபூரணம் நடராசா

24 – 10 – 95 அன்று திருமதி அன்னபூரணம் நடராசா சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சுதுமலையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி மா. நடராசாவின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி கனகேஸ்வரன் (மானிப்பாய்), காலஞ்சென்றவர்களான தர்மானந்தராசா, சரோஜினிதேவி, சொர்ணலீலா மற்றும் சித்திரலேகா, (பண்டாரவளை), நளாயினிதேவி, ஜெயபாலகௌரி [ஜேர்மனி], சிறிகணேஸ் (கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானேஸ்வரி அம்பாள் சுதாகினி (கனடா), வைத்தியகலாநிதி உரோமகேஸ்வரன் (ஆயுர்வேத மாகாணப் பணிப்பாளர்), கருணாகரன் (பண்டாரவளை), கனகசுந்தரம், (பொறியியலாளர், செயற்திட்ட அதிகாரி), சசீதரா (கனடா), ஜெபகுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், வைத்திய கலாநிதி ஜீவானந்தம், ஜீவராணி [கனடா), ஜீவராஜ், பராசக்தி, ஜீவகுமார், ஜீவானந்தி, சிராணி சுரேன் [ஜேர்மனி), புவனலோஜனி (மாணவி சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி), சிறிகுமார் (I B S) கொழும்பு], ஹேமமாலினி [மாணவி, இந்து மகளிர் கல்லூரி மானிப்பாய்), துஷ்யந்தன் மாணவன் மானிப்பாய் இந்துக் கல்லூரி), பிரதீப், அமரராஜ் விரோஜி [கனடா], கிரோஷன் [கனடா] ஆகியோரின் பேர்த்தியும், கிஷானுபா (கனடா], வின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று[26-10-95] வியாழன் காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. நடராசா
(கணவர்)

தற்போதைய முகவரி:
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(39130]

## திருமதி பாக்கியம் லோறன்ஸ்

(பிள்ளைக் குட்டி)

மண்டைதீவை பிறப்பிடமாக கொண்டு தற்போது ஆனைக்கோட்டையில் வசித்துவருமான திருமதி பாக்கியம் லோறன்ஸ் (பிள்ளைக்குட்டி) 24-10 – 95 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சலமோன் லோறன்ஸின் அன்பு மனைவியும், திரேசம்மா, ஜோச், காலஞ்சென்ற றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அலெக்சாண்டர் [கொழும்பு], யோசேப் A. J. M. புடைவை வகை உரிமையாளர்], மரியதாஸ் (இத்தாலி), உத்தமசீலி, ஞானசீலி, ஜெயசீலி [(ஜேர்மனி], அமலசீலி ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும். அந்தோனி பர்னபந்து [பிரான்ஸ்], ஜோச் [ஜேர்மனி], சேவியர் (ஜேர்மனி), காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை பிறேமா (கொழும்பு). அருள்மேரி, மேரி றோஸ், (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நியூட்டன், நிக்சன், நிருபன், நிசாலி, லக்சனா, கம்சனா, மெருஜா, மரியன்ரெலா, பிறின்டன், அன்சன், அஞ்சனா, அலக்சன், அலக்சியா, அனுசியா, றாபன், றாபிக்கா, றுபின்சன், றுபினா ஆகியோரின் அன்புப் பேர்த்திமாவார். அன்னாரின் பூதவுடல் 25-10-95 (நேற்று) பிற்பகல் 3-00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வமாணிக்கம் (யோசேப்),
[மகன்]
A. J. M. புடவையகம்,
சிறப்பங்காடி,
யாழ்ப்பாணம்.

யாழில் லேன்,
ஆனைக்கோட்டை.

[39142]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## போர் நீதிமன்றம்

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் நடத்தும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு ஸ்ரீலங்காவுக்கென ஐக்கிய நாடுகள்சபை போர் நீதிமன்றம் ஒன்றை நிறுவவேண்டும். அந்த நீதிமன்றத்தில் ஜனாதிபதி சந்திரிகாவை விசாரிக்க வேண்டும்.

நியுயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய அமெரிக்கா மற்றும் கனடா வாழ் தமிழர்கள், ஐக்கிய நாடுகள் சபையிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ருவாண்டாவும், பொஸ்னியாவும் இனப்படுகொலைக்குப் பெயர் பெற்ற நாடுகள். குறிப்பாக ருவாண்டாவில் ஹூட்டு (Hutu) என்ற பெரும்பான்மை இனத்தினர் துட்சி (Thudsi) என்ற சிறுபான்மை மக்களை லட்சக் கணக்கில் இனப்படுகொலை செய்தனர். இப்போது ஆட்சி நடத்தும் துட்சி இனத்தவர்கள் ஹூட்டுக்களைப் பழிவாங்க முற்பட்டுள்ளனர். மீண்டும் இனப்படுகொலைகள் நடைபெற இடமுண்டு.

இதே போல, பொஸ்னியாவிலும் பொஸ்னிய சேர்பியர்கள் நாட்டில் தமது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக அந் நாட்டு முஸ்லீம்களையும், குரோசியர்களையும் இனப்படுகொலை புரிந்தனர்

உள்நாட்டுப் போர் என்ற பெயரில் இனப்படுகொலை செய்வது ஓர் இனத்தை அழிக்கும் மாபெரும் குற்றமாகும். அதனாலேயே ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையில் ருவண்டாவுக்கும் பொஸ்னியாவுக்குமென போர் நீதிமன்றம் நிறுவப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

ஸ்ரீலங்காவிலும், போர் என்ற போர்வையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள். வடக்கு—கிழக்கில் அரசாங்கம் நடத்தும் போரில் நாளாந்தம் தமிழ்ப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட வண்ணமே உள்ளனர்.

அதுவும், சமாதானத்தைக் காண்பதற்கான போர் என்று வெளி உலகத்துக்குக் கூறிக்கொண்டு, தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகின்றனர்.

இது சம்பந்தமான தகவல்கள் வெளிவந்தால் அவற்றை மறுத்தும், மழுப்பியும் பொய்களை வைத்துக் கட்டி சமாளிப்பதில் ஸ்ரீலங்கா அரசு வெகு கெட்டித்தனமாகச் செயற்பட்டு வருகிறது.

எனவே ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகளைக் கண்டறிந்து அவை குறித்து விசாரிக்க சர்வதேச போர் நீதிமன்றம் ஒன்று அவசியமே.

ஓர் இனத்தின் இயக்கமும், அதன் வாழ்வும் அழிக்கப்படக் கூடாத வாழ்வுரிமையாகும். உயிர்வாழும் உரிமையை மறுக்கும் அல்லது மீறும் சகல நடவடிக்கைகளும் மனித குலத்துக்குத் துரோகமானதாகும்.

விலங்கினங்களை அழித்து அவற்றின் வாழ்வை ஒழிக்கக் கூடாது என்பதற்காக சர்வதேச சட்டங்கள் பலவும் உண்டு. அவ்வாறிருக்க தமிழ் இனத்தை இலங்கையில் இருந்து ஒழிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியைத் தடுப்பது உலகத்தின் — உலகச் சபையான ஐ. நாவின் — தட்டிக் கழிக்க முடியாத கடமையாகும்.

## தேடுதல் வேட்டை தொடர்கிறது

# ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் 5 நாள்களில் கொழும்பில் கைது!

### சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக். 26

கொலன்னாவ, ஊறுகொடவத்த எரிபொருள் களஞ்சியங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய் வரையான ஐந்து நாள்களில் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனை உறுதி செய்ததாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எண்ணெய்க் களஞ்சியங்கள் மீதான தாக்குதலில் சுமார் 19 பேர் ஈடுபட்டனர் என்றும் அவர்களில் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர்; ஏனையோர் தப்பி விட்டனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் தேடி கொழும்பு மற்றும் நுகேகொட, கிருலப்பனை, வத்தளை, பேலியகொட சேதவத்தை ஆகிய பகுதிகளில் தேடுதல் இடம்பெற்று வருவதாக கொழும்பு பிராந்திய பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஜி. பி. கொட்டகதெனிய தெரிவித்தார்.

இதற்கிடையில் —

எண்ணெய்க் களஞ்சியங்கள் மீது தாக்குதல் நடத்திய போது காயமடைந்த ஆயுதபாணி ஒருவர் வத்தளையில் உள்ள வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்து தலைமறைவாகி விட்ட சம்பவம் தொடர்பாக வத்தளைப் பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## எரிபொருளை களஞ்சியப்படுத்துவது அரசுக்குப் பெரும் பிரச்சினை

கொழும்பு, ஒக் 26

கொலன்னாவையிலும், ஊறுகொடவத்தையிலும் கடந்த 20ஆம் திகதி எரிபொருள் குதங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களைத் தொடர்ந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடுமையான களஞ்சியப்படுத்தல் பிரச்சினையை எதிர்நோக்குகிறது.

விரிவாக்கக்கூடிய பிளாஸ்டிக் குதங்களைக் கொள்வனவு செய்ய வெளிநாட்டு உதவி நாடப்படுகிறது.

சேதப்பட்ட எரிபொருள் குதங்களைத் திருத்த சுமார் ஓராண்டு காலம் பிடிக்கும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அனில் ஒபேசேகரா தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலில் ஒன்றரை இலட்சம் தொன்னுக்கு மேலான சுத்திகரிக்காத எண்ணெய் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

குதங்களுக்கு 180 கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுமார் ஒரு இலட்சம் தொன் எரிபொருள் எண்ணெய், 40 ஆயிரம் தொன் டீசல், 11 ஆயிரம் தொன் மண்ணெண்ணெய் ஆகியன தீயில் எரிந்து நாசமாகின [இ-ச]

## சிறிமாவோ கேரளா செல்கிறார்

கொழும்பு, ஒக் 26

காலில் சுகயீனமுற்றிருக்கும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அதற்கு மூலிகை சிகிச்சை பெறுவதற்காக கேரளாவில் உள்ள கோட்டைக்கல் பகுதிக்கு விரைவில் செல்லவிருக்கின்றார்.

தமது கால் சுகயீனத்துக்கு அவர் அறுவை சிகிச்சை பெற்றுக் கொண்ட போதும் இன்னும் அது சீவரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# சிறிமாவோவின் முயற்சியினாலேயே இந்திய உதவி உடனே கிடைத்தது

கொழும்பு, ஒக். 26

எரிந்து கொண்டிருந்த கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்களை அணைப்பதற்குத் தேவையான உதவிகளை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே முன்னின்று இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் அதிகாலை 1-45 மணிக்கு எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றி எரியத் தொடங்கியதும் — அது பற்றிய செய்தி தமக்கு கிட்டிய பின்னரும் கூட — காலை 3-00 மணிக்கு கட்டுநாயக்காவிலிருந்து நியூயோர்க்கிற்கு ஜனாதிபதி சந்திரிகா புறப்பட்டுச் சென்றார்.

உடனடியாக நிலைமைகளை அறிந்து கொண்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது வீட்டில் இருந்தவாறே அரச இயந்திரத்தை முற்றாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து — உரிய நடவடிக்கைகளுக்கு — உத்தரவுகளைப் பிறப்பித்தார் என்றும் —

இந்தியப் பிரதமருடன் தாமே நேரடியாக தொலைபேசியில் உரையாடி உதவிகளைக் கோரினார் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்தே இந்தியப் பிரதமர் இந்திய விமானப் படையின் விமானத்தில் தீயணைக்கும் குழுவினரை உரிய உபகரணங்களுடன் அனுப்பி வைத்ததாகவும் கூறப்பட்டது. (உ)

## தமிழர் மூவர் பாணந்துறையில் கைது

கொழும்பு, ஒக். 26

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் உட்பட மூன்று தமிழரை பாணந்துறை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் தனது பெயர் தேவிகா எனவும் தான் வெள்ளவத்தையில் வசிப்பவர் எனவும், மொரட்டுவைக்கு உறவினர் ஒருவரைத் தேடி ரயிலில் வந்த போது தவறுதலாக பாணந்துறையில் இறங்கி விட்டதாகவும் பொலீஸாரிடம் தெரிவித்தாராம்.

# 3 மணித்தியாலத்துக்கு மேல் நின்று சமர்புரிந்த தாக்குதல் குழுவினர்

### தப்பிச்செல்லும் போது தற்கொலைத் தாக்குதல்

கொலன்னாவை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்குள் அதிகாலை 1-15க்கு புகுந்து திடீர் தாக்குதலை ஆரம்பித்த தாக்குதல் குழுவினர் காலை 4-30 மணி வரை எண்ணெய் குதப் பகுதிக்குள் நின்று அங்கிருந்த படையினருடன் சமர் புரிந்ததாகக் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடத்தி எண்ணெய்க் குதங்களை தீப்பிடிக்க வைத்த பின்னர் தாக்குதல் நடத்தியோர் ஜீப் ஒன்றில் ஏறி வெளியேற முற்பட்டதாகவும்—

அச்சமயம் விமானப்படை மற்றும் இராணுவத்தின் குண்டுத் தாக்குதல் படைப் பிரிவுகள் வீதியை மறித்து தடைகளைப் போட்டிருந்ததாகவும்—

ஜீப்பில் வந்த தாக்குதல் படைப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஜீப்பை விட்டு இறங்கி தடைபோடப்பட்டிருந்த பகுதிக்கு ஓடி வந்து. தம்மைத் தாமே வெடிக்கவைத்து தடையை அகற்றியதாகவும்—

அதனையடுத்து ஜீப்பில் வந்தோர் தப்பிச் சென்றதாகவும்—

"த சண்டே டைம்ஸ்" தகவல் வெளியிட்டிருந்தது. (உ)

## தாக்குதல் குழுவில் 19 பேர்?

ஆகக்குறைந்தது 19பேரைக் கொண்ட இரு தாக்குதல் அணிகளே கொலன்னாவை எண்ணெய்க் குதங்களைத் தாக்கியிருக்க வேண்டும் என தாங்கள் நம்புவதாக பிரதி பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியா தெரிவித்தார். (உ)

## ஜனாதிபதி நடந்துகொண்ட விதம் வெட்கக்கேடானது

### அனுரா கூறுகிறார்

கொழும்பு, ஒக். 26

கொலன்னாவை, ஊறுகொடவத்த எண்ணெய்க்குதங்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு புறப்பட்டிருந்தார். தேசிய பேரழிவு ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் ஜனாதிபதி இப்படிச் சென்றது வெட்கக்கேடானது.

அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1-45 மணி அளவில் எண்ணெய்க் குதங்கள் மீது ஆயுதபாணிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர். ஜனாதிபதி அதேதினம் அதிகாலை 3-00 மணிக்கு எமிரேட்ஸ் விமானம்மூலம் ஐ. நா. பொன்விழாவில் கலந்துகொள்ள நியூயோர்க் புறப்பட்டிருந்தார்

ஜனாதிபதி ஆயுதப்படைகளின் தலைவராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கிறார். பொறுப்புமிக்கத் தலைவர் ஒருவர் இப்படிச் செய்திருக்கக்கூடாது. தமது பயணத்தை அவர் பின் போட்டிருக்க வேண்டும்.

இப்படி அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

பிரதமர் [illegible] எந்த வழியிலும் நிலைமையை சமாளித்ததாக அவர் பிரதமரைப் பாராட்டினார். (இ)

## வேம்படி மகளிர் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 11க் கல்விகற்கும் மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். [ஒ]

## ஐ. நா. வளாகத்தில் புகைத்தல் தடை

நியுயோர்க்கில் ஐ நா. செயலகத்தின் வளாகத்தில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சிகரெட் புகை சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் என்பதால் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஐ நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புகை பிடிப்பது அபாயகரமானது என்பது இப்போது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் விடுதலை போராட்டத்தை இந்தியா ஏன் ஆதரிக்க முடியாது?

## நடிகர் மன்சூர் அலிகார் கேள்வி

லண்டன், ஒக். 26

உலகில் நடக்கும் விடுதலைப் போராட்டங்களை இந்தியா ஆதரித்தது. ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை மட்டும் ஏன் இந்தியாவினால் ஆதரிக்க முடியாது?

ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதற்கு மத்திய அரசு விழுந்தடித்துக்கொண்டு கங்கணம் கட்டுவதேன்?

இவ்வாறு கேட்டார் ஈழத் தமிழருக்கு ஆதரவான முப்பது அமைப்புகளின் அமைப்பாளர்களில் ஒருவரான திரைப்பட நடிகர் மன்சூர் அலிகார்.

பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்நாட்டைக் கொடுக்குமாறு நாம் மத்திய அரசைக் கேட்கவில்லை. இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு நடக்கும் முறை எமக்குப் பிடிக்கவில்லை. அங்கு ஓர் விடுதலைப் போராட்டம் நடக்கிறது. விடுதலைப் புலிகள் வேள்வித்தீயில் வெந்து மடிந்து லட்சக்கணக்கானவர்கள் உயிரைப் பணயம் வைத்து விடுதலைக்காகப் போராடுகிறார்கள். அவர்கள் அங்கு எண்ணெய்க் கிடங்கை தாக்கினார்கள்.

அதனால் மூண்ட தீயை அணைக்க இந்தியா எப்படிப் போகமுடியும்? இராணுவத்தை எப்படி அனுப்ப முடியும்?

### தமிழரைத் தாக்க உதவலாமா?

எமது வரிப்பணமும் மத்திய அரசுக்குச் சேர்கிறது. எமது வரிப்பணத்தைக் கொண்டு இலங்கைத் தமிழரைத் தாக்க இலங்கை அரசுக்கு நாம் எவ்வாறு உதவமுடியும்.

உலகில் உள்ள தமிழர்கள் எல்லோரும் தமிழீழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். ஆனால் இந்தியா மட்டும் இதற்கு எதிராக நிற்பது ஏன்?

### ராஜீவ் கொலை

ராஜீவ் கொலை கண்டிக்கப்படவேண்டியது. அந்த கொலை குறித்து வழக்கு நடக்கிறது.

அதே நேரத்தில் இந்திய அமைதிப்படை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழரை கொன்று அழித்தது. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழர்கள் சின்னா பின்னமாக்கப்பட்டனர். இதை மறக்கமுடியாது! மறக்கவும் முடியாது. ராஜீவ் கொலையை விட இது மோசமான விடயம் அல்லவா?

ஈழத்தமிழர்கள் சிங்களவருக்குச் சொந்தமான பகுதியைக் கேட்கவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகள் தாம் வாழ்ந்த இடத்தைத்தான் கேட்கிறார்கள். சோழர்கள் ஆண்ட பூமி அது.

இங்கு தமிழர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினாலும் குற்றம் என்ற நிலை.

உலக முழுவதும் எத்தனையோ விடுதலைப் போராட்டங்களைக் கண்டு இருக்கிறோம். ஈழத் தமிழர்கள் தமது விடுதலைப் போராட்டத்தை 40 வருடங்களாக நடத்துகிறார்கள். அவர்கள் வெற்றி பெறவேண்டும் என்பதே எமது அவா. 9 கோடி தமிழர்களின் அவா இது.- என்றார்.

## உடுவில் உ. அ. அதிபர் பிரிவில்

# தேசிய பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 26

உடுவில் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட, தேசிய பாதுகாப்பு நிதிக்கு இதுவரை ஒப்புதல் அளிக்காத அனைத்து மக்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும்படி உடுவில் வட்டச் செயலக அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

கிராம சேவையாளர் பிரிவுகள் பின்வருமாறு:-

உடுவில் மத்தி, வடக்கு, வட மத்தி, தென் கிழக்கு, தென் மேற்கு சங்குவேலி,

இணுவில் தென் மேற்கு, கிழக்கு, வடகிழக்கு, மேற்கு, தாவடி தெற்கு, கிழக்கு, வடக்கு,

சுன்னாகம் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்தி சந்தரோடை.

ஏழாலை மேற்கு, தென் மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு, மத்தி,

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, வடக்கு, ஈவினை குப்பிளான் தெற்கு வடக்கு. [ஓ]

### நீர்வேலிப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி பயங்கர ஷெல் தாக்குதலை நடத்தினர். நீர்வேலி பூதர்மடம், கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் ஷெல் குண்டுகள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன.

இதேவேளை நேற்று படையினரின் நடவடிக்கையின் போது புத்தூருக்கும், சிறுப்பிட்டிக்கும் இடையில் தோட்ட வெளியில் கவச வாகனம் ஒன்று புதையுண்டுவிடும் பிரயத்தனத்துக்குப் பின் அதை மீட்டெடுத்ததாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணம் அடைந்தனர். (ஒ-3-5)

### தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்த முப்பது அமைப்புகளில் சிலவாகும்.

இந்த அமைப்புகள் கூட்டாக மத்திய அரசுக்கு அனுப்பிய மகஜரில் உள்ள விடயங்கள் குறித்து அது கவனம் செலுத்தாவிடில் —

மத்திய அரசுக்கு எதிராக சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம், ஸ்ரீலங்கா தூதரகம் ஆகியவற்றின் முன்னால் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்துவதற்கு 30 அமைப்புகளின் கூட்டுச் செயற்குழு முடிவு செய்துள்ளது. [அ-3]

### யாழ். நகரைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

21 ஆயிரம் துருப்புக்களை தயார் நிலையில் வைத்துள்ளதாக கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்நகரைக் கைப்பற்றுவதற்கான யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படைகள் ஆகிய இருதரப்புக்களுக்கும் மட்டுமன்றி பொது மக்களுக்கும் பாரிய சேதங்களும், உயிரிழப்புக்களும் ஏற்படக் கூடும் எனவும் இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஓ-3-6)

# மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

## போராளியின் வித்துடல் இன்று விதைப்பு

''சூரிய பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையை எதிர்த்து நேற்று இடம்பெற்ற கடும் சண்டையில் வீரச்சாவடைந்த வீரவேங்கை இலக்கியன் அல்லது சேனாதிபதி [தியாகராஜா ஆனந்தன் - மட்டக்களப்பு] என்ற போராளியின் வித்துடல் இன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

அவரது தற்போதைய கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி இல்லத்தில் இருந்து வித்துடல் இன்று பி. ப. 3 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ். ஐந்து சந்தி நீர்வேலி நகர் மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின் 4 மணிக்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்படும். [ஓ]

### தென்மராட்சி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கை ஏற்படும் பட்சத்தில் குடாநாட்டில் உள்ள சகல மக்களும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் —

அப்படி இடம்பெயரும் மக்கள் பாதுகாப்புடன் தங்க வசதியாக தென்மராட்சி பகுதியைப் பாதுகாப்பு பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டும் —

அவ்வாறு ஏற்பாடு செய்யாவிடின் பாரிய உயிரிழப்புக்களை மக்கள் சந்திக்க நேரிடும் — என்றும் நேற்றைய கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டது.

இக்கோரிக்கையை தமது தலைமையகங்களுக்கு அறிவிப்பதாக மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

### கொழும்புக்குச் செய்தி

இதேவேளை —

தென்மராட்சிப் பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக்க வேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை குறித்த செய்தி கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரக அலுவலகத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அலுவலகத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரக அதிகாரியான வாபியோ வரொலி இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்.

இச்செய்தி ஜெனிவாவில் உள்ள தலைமையகத்துக்கும் [illegible] (ஒ)

# ராணுவ நடவடிக்கை ஏன்? சந்திரிகாவின் புதிய காரணம்

நியூயோர்க், ஒக். 26

தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வன்முறை உகந்த வழியல்ல என்று விடுதலைப் புலிகளுக்கு உணர்த்துவதற்கு தற்போதைய இராணுவ நடவடிக்கை அவசியமானது — என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய காரணம் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க வெளிநாட்டு உறவுகள் மன்றத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;-

சமாதானம் அதிக விலையானது. சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஒருபுறம் இருக்க, பெறுமதி வாய்ந்த உயிர்கள் அரசியல் வாழ்வின் உறுதியற்ற தன்மை ஆகியவற்றைக் கொண்டு சமாதானத்தின் பெறுமதியை மதிப்பிட முடியும்.

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை அடைவது இலகுவான செயல் அல்ல. கலந்துரையாடுவதன் மூலம் அனைத்து தமிழ் மக்களையும் பேச்சுவார்த்தை நடைமுறைக்கு கொண்டு வர அரசு சகல முயற்சிகளையும் எடுத்தது.

தற்போதைய மோதல்களுக்கு மத்தியிலும் உணவுப் பொருள், மருந்துப் பொருள் ஆகியவற்றை வடக்குக்கு விநியோகிப்பதை அரசு நிறுத்தவில்லை.

ஆனாலும் அரசின் இந்த முயற்சிகளை விடுதலைப்புலிகள் அங்கீகரித்ததாக இல்லை.

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முயலும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஏனைய நாடுகளின் அரசாங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

1983 ஆம் ஆண்டின் ''கறுப்பு ஜூலை'' என்று விவரிக்கப்பட்ட கலவரம் பெரும்பான்மை சிங்கள மக்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்படுத்திய இனவாத நடவடிக்கை அல்ல; அரசியல் இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் வேண்டுமென்றே ஒழுங்கு செய்யப்பட்ட குண்டர்களின் நடவடிக்கை என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது — என்றார்.

# இன்று முதல் நவ. 1 வரை மரநடுகை கொடிவாரம்

தமிழீழ விடுதலைப் போர் முனைப்படைந்து வரும் வேளையிலும், தமிழீழச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக சூழல் பாதுகாப்புக் கொடி வாரமும், மரநடுகையும் மேற்கொள்ளப்படுகின்றது.

இன்று ஒக்டோபர் 26 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் முதலாம் திகதிவரை தமிழீழம் எங்கும் மரநடுகைக்கான கொடிவாரமாகப் பிரகடனப்படுத்தி மக்களுக்கு கொடி விநியோகம் செய்யவும், மரநடுகை செய்யவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மழைக்காலம் ஆரம்பித்துள்ள காரணத்தால் சூழலைப் பாதுகாக்கும் மரங்களை நடுகை செய்வதோடு, கொடிகளைப் பெற்று ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி கேட்டுள்ளது.

# அடுத்துவரும் வாரங்கள் நெருக்கடியானவையாம்

கொழும்பு, ஒக். 26

அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்கள் மிகவும் நெருக்கடியானவையாக இருக்கும். இந்தக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் ராணுவம் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்.

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களும், கொழும்பில் வாழும் யாழ்ப்பாண மக்களும், யாழ்ப்பாணத்துக்கு வெளியே வாழும் மக்களும் அடுத்த பத்து அல்லது பன்னிரண்டு நாட்களுக்குள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடியதாக இருக்கும் — எனவும் சரத் முனசிங்கா கூறினார்

POLIO PLUS

ROTARY INTERNATIONAL

★ போலியோ ஒழிப்பு ★

பெற்றோர்களே!

நவம்பர் 4ஆம் திகதி உங்கள் பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்க சுகாதாரப் பகுதியினர் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உங்கள் பகுதிக்கு வரும் சுகாதாரத் தொண்டர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி—

உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்!

இடம்பெயர்ந்து கஷ்டமுறும் நிலையிலும்....

இது மிக அவசியம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26- 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org